# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.18/2024

Deposition of Witness for L.W.2 / P.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கஸ்தூரி | | | |
| Husband's Name | : | குமார் | Occupation | : | இல்லத்தரசி |
| Village | : | R.N.புதூர் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.02.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் R.N. புதூரில் குடியிருந்து கொண்டு, இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். எனக்கும், கோவிந்தம்மாள் என்பவருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. இது சம்பந்தமாக கோவிந்தம்மாள் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் மனு அளித்து விட்டார். இந்த மனு சம்பந்தமாக கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் இருந்து என்னை விசாரிக்க அழைத்ததின் பேரில் நான் 19.06.2023 ஆம் தேதி, காலை 10:30 மணிக்கு காவல் நிலையம் சென்று இருந்தேன். காவல் நிலையத்தில் நான் நின்று கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி எதிர்பாராத விதமாக என்னை தகாத வார்த்தையால் பேசி காலில் அணிந்திருந்த செருப்பை கழற்றி என்னை சரமாரியாக தலை, முகம் ஆகியவற்றில் தாக்கினார். இதைப் பார்த்த வரவேற்பாலர் அறையில் உட்கார்ந்திருந்த பெண் காவலர் ஒருவர் ஆஜர் எதிரியிடம் எதற்காக இப்படி அடிக்கிறாய் என்று கேட்டதற்கு, பெண் காவலரையும் அதே செருப்பால் அடித்து தகாத வார்த்தைகள் அவரையும் திட்டினார். ஆஜர் எதிரி பிறகு என்னை பார்த்து உன்னை என்ன செய்கிறோன் என்று பாறு என்று சரமாரியாக திட்டனார்.என்னை செருப்பால் அடித்தார். என்னை அடித்த செருப்பின் நிறம் இதுதான்

ஆனால் இந்த செருப்பால்தான் அடித்தாரா என்று என்னால் உறுதியாக கூற முடியவில்லை. என்னை செருப்பால் அடித்ததில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. அதனால் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

ஆஜர் எதிரி என்னையும், பெண் காவலரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினாரா என்றால், உன்னை என்ன பன்றேனு பாரு என்று தான் மிரட்டினார். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் செருப்பால்தான் என்னை தாக்கினார் என்றால், நிறம் அதுதான், என்னை தாக்கியது பழைய செருப்பாக இருந்தது. ஆஜர் எதிரி என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்ற சம்பவத்தை மறைத்தும், நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் செருப்பால் தாக்கியது தெரிந்து கொண்டும், தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.18/2024
Deposition of Witness for L.W.3 / P.W.5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஷஜகான் | | | |
| Husband's Name | : | சாகுல் ஹமீத் | Occupation | : | ஜவுளி தொழில் |
| Village | : | B.P.அக்ரஹாரம் | | | |
| District | : | ஈரோடு | Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.02.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு **B.P.**அக்ரஹாரத்தில் குடியிருந்துக்கொண்டு, தொழில் செய்து வருகிறேன். கடந்த **19.06.2023** ஆம் தேதி, காலை **10:45** மணிக்கு, எனது மனைவி ஆரம்பிக்கும் பர்தா கடைக்கு பிளக்ஸ் வைப்பது சம்பந்தமாக நான் கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் அனுமதி பெறுவதற்கு சென்றிருந்தேன் அப்போது ஆஜர் எதிரிக்கும், அ.சா.4 கஸ்தூரிக்கும் ஏற்கனவே பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்ததால் அங்கு வந்த ஆஜர் எதிரி அ.சா.4–ஐ பார்த்து தகாத வார்த்தையால் பேசி, காலில் அணிந்திருந்த செருப்பை கழட்டி கன்னத்தில் அடித்துவிட்டார். அதை தடுக்க வந்த கருங்கல் பாளையம் காவல் நிலைய பெண் காவலரை அதே செருப்பால் கன்னத்தில் அடித்து தகாத வார்த்தையால் பேசினார். இதனால் அங்கு பிரச்சனையானது.

ஆஜர் எதிரி பணியில் இருந்த பெண் காவலரையும், அ.சா.4 ஆகியோரையும் கொன்று விடுவதாக மிரட்டினார். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

J.M. A.M.C.